# சீறத்துன்னபி ﷺ

## நாள் 12



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: குரைஷிகள் நபி (ஸல்) அவர்களிடம் அற்புதங்களைக் காண்பிக்குமாறு கேட்டது
- பகுதி 2: நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட அனைத்து அற்புதங்களும் வழங்கப்படாததற்கான காரணங்கள்
- பகுதி 3: வரலாற்று உண்மைகள் குறித்து நபி (ஸல்) அவர்களிடம் கேள்விகள் எழுப்புதல்
- பகுதி 4: யூதர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட மூன்று கேள்விகள்
- பகுதி 5: நபி (ஸல்) அவர்களுடன் நேரடி பேச்சுவார்த்தைகள் நடத்தியது
- பகுதி 6: குரைஷிகள் தெரிவித்த சமரச உடன்பாடு மற்றும் அதற்கு வஹீ மூலம் வந்த தீர்க்கமான பதில்கள்

## பகுதி 1: குரைஷிகள் நபி (ஸல்) அவர்களிடம் அற்புதங்களைக் காண்பிக்குமாறு கேட்டது

- குரைஷிகள் நபி (ஸல்) அவர்களைக் கேலி செய்ய ஆரம்பித்தனர். அதே வேளையில், இஸ்லாம்தான் உண்மையான மார்க்கம் என்பதை உணர்ந்து, முழு மனதுடன் இஸ்லாத்தைத் தழுவியவர்களும் ஏராளம்.

- மேலும், குரைஷிகள் நபி (ஸல்) அவர்களை பல்வேறு வழிகளில் துன்புறுத்த ஆரம்பித்தனர்.

- குரைஷிகள் நபி (ஸல்) அவர்களிடம் அற்புதங்களைக் காண்பிக்குமாறு சவால் விட்டார்கள்.

- இந்த சவால்களை அல்லாஹ் குர்ஆனில் 17வது ஸூரா அல்இஸ்ராவின் வசனங்கள் 90 முதல் 93 வரை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளான்:

- இன்னும், அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘நீர் எங்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு நீரூற்றைப் பீறிட்டு வரும்படி செய்யும் வரையில், உம்மீது நாங்கள் நம்பிக்கை கொள்ளமாட்டோம்’’.

- அல்லது, பேரீச்சை மரங்களும், திராட்சைக் கொடிகளும் (நிரம்பி) உள்ள தோட்டம் ஒன்று உமக்கு இருக்க வேண்டும்; அதன் நடுவே ஆறுகளை நீர் ஓலித்தோடச் செய்ய வேண்டும்.

- அல்லது, நீர் எண்ணுவதுபோல் வானம் துண்டுதுண்டாக இடிந்து, எங்கள் மீது விழச் செய்யும் வரை;

- அல்லது, அல்லாஹ்வையும் வானவர்களையும் (நம்) முன்பாகக் கொண்டுவரும் வரை.

- ‘‘அல்லது, ஒரு தங்கமாளிகை உமக்கு இருந்தாலன்றி (உம்மீது நம்பிக்கை கொள்ளோம்);

- அல்லது, வானத்தின் மீது நீர் ஏறிச்செல்ல வேண்டும்: (அங்கிருந்து) எங்களுக்காக நாங்கள் படிக்கக்கூடிய ஒரு (வேத) நூலை நீர் எங்கள் மீது இறக்கிவைக்கும் வரையில் நீர் (வானத்தில்) ஏறியதையும் நாங்கள் நம்பமாட்டோம்’’ (என்று கூறுகின்றனர்).

- இந்த வசனங்களின் முடிவில் அல்லாஹ் நபியிடம் கூறுவது: ''என் இறைவன் மிகத்தூயவன்: நான் (இறைவனுடைய) தூதனாகிய ஒரு மனிதனே தவிர வேறெதுவுமாக இருக்கின்றேனா?'' என்று (நபியே! நீர் அவர்களுக்கு பதில்) கூறுவீராக!

- இறைமறுப்பாளர்கள் நேர்மையான நோக்கத்திற்காக அல்லாமல், ஆணவத்தால் அற்புதங்களைக் கேட்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. இதனை மேலும் விளக்க, சந்திரன் பிளவுபட்ட சம்பவம் பற்றியும், அதை நம்பாதவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதைப் பற்றியும் அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

- அல்லாஹ் கூறுகிறான்: ''மறுமைநாள் நெருங்கிவிட்டது; சந்திரனும் பிளந்துவிட்டது''. – ஸூரா அல்கமர் (54:1)

- எனினும், அவர்கள் ஓர் அத்தாட்சியைப் பார்த்தால், (அதைப்) புறக்கணித்துவிடுகிறார்கள்; ''இது வழமையாக நடைபெறும் சூனியம்தான்'' என்றும் கூறுகிறார்கள். – ஸூரா அல்கமர் (54:2)

## பகுதி 2: நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட அனைத்து அற்புதங்களும் வழங்கப்படாததற்கான காரணங்கள்

- இறைமறுப்பாளர்கள் கேட்கும் அனைத்து அற்புதங்களையும் வழங்காததற்குக் காரணம் முந்தைய தலைமுறையினர்களுக்கு காண்பிக்கப்பட்ட அற்புதங்களைக் கண்டு அவர்கள் நடந்துகொண்ட முறை என அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான்.



- மனிதனை எச்சரிக்கை செய்யவே அற்புதங்கள் காண்பிக்கப்படுகின்றன. நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட அற்புதத்தைக் கண்டு, மனிதன் அவர்களை நம்பாமல் இருந்துவிட்டால், அவனுக்கு அழிவுதான்.

- அல்லாஹ் கூறுகிறான்: (நம்முடைய அத்தாட்சிகளை இவர்களுக்கு) முந்தியவர்களும் பொய்ப்பித்ததைத் தவிர (வேறு எதுவும் இவர்கள் கோரும்) அத்தாட்சிகளை அனுப்ப நம்மைத் தடுக்கவில்லை: (இதற்குமுன்) நாம் ஸமூது கூட்டத்தாருக்கு ஒரு பெண் ஒட்டகத்தைக் கண்கூடான அத்தாட்சியாகக் கொடுத்திருந்தோம்; அவர்களோ, (வரம்பு மீறி) அதற்கு அநியாயம் செய்தனர்; (மக்களை) அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவே அன்றி நாம் (இத்தகைய) அத்தாட்சிகளை அனுப்புவதில்லை. – ஸூரா அல்இஸ்ரா (17:59)

- எனினும், நபி ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டு, இன்றும் நாம் காணும் மாபெரும் அற்புதம் அல்குர்ஆன் ஆகும்.

- அனைத்து நபிமார்களுக்கும் அவர்கள் நாட்டு மக்களுக்காக மட்டுமே அற்புதங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் குர்ஆன் என்ற அற்புதம், தலைமுறை தலைமுறையாக கியாமத் நாள்வரை வரும் ஒரு தலைசிறந்த அற்புதம்.

- இறைமறுப்பாளார்கள் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களிடம் அற்புதங்களை காட்டுமாறு சவால் விடுத்த அதேவேளையில், அல்லாஹ் இந்தக் குர்ஆனைக் கொண்டு மனிதனுக்கு ஒரு சவாலை விடுவிக்கிறான்:

- ''இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவருவதற்காக மனிதர்களும், ஜின்களும் ஒன்றுசேர்ந்து (முயன்று), அவர்களில் சிலர் சிலருக்கு உதவிபுரிபவர்களாக இருந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்கள் கொண்டுவரமுடியாது'', என்று (நபியே!) நீர் கூறும். – ஸூரா அல்இஸ்ரா (17:88)

## பகுதி 3: வரலாற்று உண்மைகள் குறித்து நபி (ஸல்) அவர்களிடம் கேள்விகள் எழுப்புதல்

- நபி (ஸல்) அவர்களைக் கேலி செய்வதற்காக மக்காவாசிகள் பயன்படுத்திய மற்றொரு தந்திரம், அவர்களிடம் சில வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி கேள்வி கேட்டு அவர்களை திணறடிப்பது. அம்மக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த நிகழ்வுகள் பற்றி தெரியாது என உறுதியாக நம்பினர்.

- இப்ராஹீம் (அலை) அவர்களின் நபித்துவம் நடந்து பல நூற்றாண்டுகள் ஆகி, நீண்ட காலத்திற்குப் பிறகு மறந்துவிட்ட நிலையில், அரேபியர்களுக்கு நபி என்ற கருத்து புதிதாக இருந்தது. இருப்பினும், அரேபியாவில் பல யூதர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் தங்களது வேத நூல்கள் மூலம் நபிமார்களைப் பற்றி அறிந்தவர்கள்.

- எனவே இந்த யூதர்கள், நபி (ஸல்) அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டு அவர்களை சோதிக்கும்படி காஃபிர்களை தூண்டினார்கள்.

- ஒருமுறை, மக்கள் நபி (ஸல்) அவர்களிடம், ‘‘இஸ்ரவேலர்கள் ஏன் எகிப்துக்குச் சென்றார்கள்?’’ என்று வினவினார்கள்.

- இஸ்ரவேலர்களின் வரலாறு அரேபியர்களுக்குத் தெரியாது. ஆதலால், நபி (ஸல்) அவர்களுக்கு அது பற்றி தெரிய வாய்ப்பில்லை. இதனால் நபி (ஸல்) அவர்களுக்கு பதில் தெரியாமல் அம்பலமாகி விடுவார்கள் என்று நினைத்தார்கள்.

- ஆனால் பின்னர், யூசுஃப் (அலை) அவர்களின் வரலாறு மற்றும் அவர்கள் எகிப்திற்கு எப்படி வந்தார்கள் என்பதை விரிவாக விளக்கிய 12வது ஸூரா யூசுஃப் முழுவதையும் அல்லாஹ் வெளிப்படுத்தினான். அதில் காஃபிர்கள் கேட்ட கேள்விக்கான நேரடி பதிலும் உள்ளது.

- ‘‘(பின்னர் குடும்பத்துடன்) அவர்கள் யூசுஃபிடம் வந்தபோது, அவர் தம் தாய், தந்தையரை (கண்ணியத்துடன் வரவேற்றுத்) தம்முடன் வைத்துக்கொண்டார்; இன்னும், ‘‘அல்லாஹ் நாடினால் நீங்கள் எகிப்துக்குள் அச்சமற்றவர்களாகப் பிரவேசியுங்கள்’’ என்றும் கூறினார். – ஸூரா யூசுஃப் (12:99)

## பகுதி 4: யூதர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட மூன்று கேள்விகள்

- நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்த மக்காவின் இறைமறுப்பாளர்கள் மற்றொரு முயற்சியை மேற்கொண்டனர்.

- அவர்கள் ஒரு தூதுக்குழுவை யத்ரிப் (மதீனா) வரை அனுப்பி, அங்குள்ள சில யூதர்கள் மூலம் சில கடினமான கேள்விகளை, நபி (ஸல்) அவர்களிடம் கேட்க ஏற்பாடு செய்தனர்.

- இந்த முயற்சியில், மதீனா யூதர்கள் மூன்று கேள்விகளை முன்வைத்தனர். இந்தக் கேள்விகளுக்கான பதில் உண்மையான நபிக்கு மட்டுமே தெரியும் என்றும் கூறினார்கள். அவை:



- 1. குகைக்குள் நுழைந்து, நீண்ட நேரம் தூங்கிய சில இளைஞர்கள் பற்றிய வரலாறு என்ன?

- 2. கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி உலகத்தை பயணித்த ஒரு மனிதரைப் பற்றிய வரலாறு என்ன?

- 3. ரூஹ் என்றால் என்ன? அது எதனால் ஆனது?

- முதல் கேள்விக்கான பதில் 18வது ஸூரா அல்கஹ்ஃபுவில் வசனம் 9 முதல் 25 வரை கூறப்பட்டுள்ளது. அதில் முந்நூற்று ஒன்பது (309) ஆண்டுகள் குகையில் தங்கியிருந்த இளைஞர்களின் வரலாற்றை அல்லாஹ் விவரிக்கின்றான்.

- இரண்டாவது கேள்விக்கான பதில் அதே ஸூரா அல்கஹ்ஃபுவில் வசனம் 83 முதல் 98 வரை கூறப்பட்டுள்ளது. அரசன் துல்கர்னைனின் பயணங்கள் விரிவாக அவற்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

- இந்த வசனங்கள் அவர்களது கேள்விக்கான நேரடியான பதில்களை அளித்தது மட்டுமின்றி, சம்பவத்தின் முழு விவரங்களையும் அளித்தன.

- ரூஹ் (ஆன்மா) பற்றிய பற்றிய மூன்றாவது கேள்வி கடினமானது. ஏனெனில் அதற்கு யூதர்களுக்கு கூட பதில் தெரியாது.

- எனவே, இந்தக் கேள்வி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அல்லாஹ் இறக்கிய வசனம்: ‘‘(நபியே!) உம்மிடம் ரூஹைப் (ஆத்மாவை) பற்றி அவர்கள் கேட்கிறார்கள்: ‘‘ரூஹ் (ஆத்மா) என் இறைவனுடைய கட்டளையிலிருந்தே உள்ளதாகும்; இன்னும், ஞானத்திலிருந்து உங்களுக்கு அளிக்கப்பட்டது மிகச் சொற்பமேயன்றி வேறில்லை’’ எனக் கூறுவீராக!’’ – ஸூரா அல்இஸ்ரா (17:85)

- அவர்களின் அனைத்து கேள்விகளுக்கும் வஹீ மூலம் பதில்கள் கிடைத்தபின், குரைஷிகளின் திட்டங்கள் முழுவதுமாக அழிந்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் நடத்தையில் சந்தேகத்தை உருவாக்கி, இப்போது இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதில் என்ன தடையுள்ளது என்பது குறித்து அவர்களிடம் கேள்விகளை எழுப்பியது.

## பகுதி 5: நபி (ஸல்) அவர்களுடன் நேரடி பேச்சுவார்த்தைகள் நடத்தியது

- இப்போது, இஸ்லாம் பரவுவதைத் தடுக்க மற்றொரு தந்திரத்தை பயன்படுத்த குரைஷிகள் முன்வந்தனர். அதாவது நபி (ஸல்) அவர்களை நேரடியாகப் பேச்சுவார்த்தைக்கு அணுகுவது; மேலும் தேவைப்பட்டால் அவர்களுக்கு வெளிப்படையாக லஞ்சம் கொடுப்பதும் ஆகும்.

- அல்சிரா அல்நபவியாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சம்பவம் உத்பா இப்னு ரபியா என்ற நபி (ஸல்) அவர்களின் தூரத்து உறவினர், நபிக்கு லஞ்சம் கொடுக்க மேற்கொண்ட முயற்சி.

- குரைஷிகளின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட உத்பா, தான் குரைஷிகளின் பிரதிநிதியாகச் சென்று நபி (ஸல்) அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த தயார் எனக் கூறினார்.



- மக்கள் அதை வரவேற்று, அவர் மட்டும் முஹம்மது (ஸல்) அவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து விட்டால், உத்பா கேட்கும் எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயார் என அவரை ஆதரித்தனர்.

- எனவே அவர் கஃபாவின் அருகில் அமர்ந்திருந்த நபி (ஸல்) அவர்களிடம் சென்று தனது கருத்துக்களை முன்வைத்தார்.

- முதலில் அவர் நபி (ஸல்) அவர்களின் பரம்பரையைப் புகழ்ந்து அவரிடம் இவ்வாறு கேட்கிறார்:

- ''உங்களில் யார் சிறந்தவர் – நீங்களா அல்லது உங்கள் தந்தை அப்துல்லாவா? உங்களில் யார் சிறந்தவர் – நீங்களா அல்லது உங்கள் பாட்டனார் அப்துல் முத்தலிபா?''

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருக்க முடிவு செய்தார்கள்.

- பின்னர் உத்பா தொடர்கிறார்: ''உங்களைப் போல் உண்மையான எந்த இளைஞனையும் நாங்கள் பார்த்ததில்லை. நீங்கள் நம்பிக்கையின் அடையாளமாக இருந்தீர்கள். நாங்கள் உங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால் அதையெல்லாம் இப்போது நீங்கள் பாழ்படுத்தி விட்டீர்கள்.

- ''நீங்கள் நமது சமூகத்தை உடைத்து நம்மக்களை பிளவுபடுத்திவிட்டீர்கள். அதனால் அரேபியர்கள் நம்மை கேலி செய்கிறார்கள்; மேலும், உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழல் உருவாகிவிட்டது.''

- இவ்வாறு கூறிய பின்னர் உத்பா தனது கோரிக்கைகளை முன்மொழிகிறார். ''நான் சொல்வதைக் கேளுங்கள்! நீங்கள் ஒரு புத்திசாலி. நான் எனது பரிந்துரைகளை முன்வைப்பேன்; அவற்றில் சிலவற்றை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.''

- 1. உங்களுக்கு பணம் வேண்டுமென்றால், குரைஷிகளின் ஆதரவுடன், எங்களில் எவரிடமும் இருப்பதை விட அதிக பணத்தை உங்களுக்கு நாங்கள் வழங்குகிறோம். இதனால் நீங்கள் அரேபியாவில் மிகப்பெரிய பணக்காரராக இருப்பீர்கள்.

- 2. உங்களுக்கு ஆட்சி, அதிகாரம் வேண்டுமென்றால், உம்மை

தலைவராக்குகிறோம்.

- 3. உங்களுக்குப் பெண்கள் மீது ஆசை என்றால், நீங்கள் தேர்ந்தெடுக்கும் பெண்களை உங்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறோம்.

- 4. நீங்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக நினைத்தால், உங்களைக் கவனித்துக்கொள்ள சிறந்த மருத்துவர்களை நாங்கள் நியமிக்கிறோம்.

- இவற்றைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ‘‘நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா?’’ என்று வினவினார்கள். அதற்கு உத்பா, ‘‘ஆம், நான் பேசி முடித்துவிட்டேன்’’ என்று கூறினார்.

- பின்னர் நபி (ஸல்) அவர்கள், ‘‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்! ஹா மீம்! ....’’ என்று ஆரம்பித்து 41வது ஸூரா ஹாமீம் ஸஜ்தாவை ஓதத் தொடங்கினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் இந்த ஸூராவை தொடர்ந்து ஓதிக் கொண்டே இருக்கிறார்கள். குர்ஆனை எந்த இடையூறும் இல்லாமல் கேட்பது உத்பாவிற்கு இதுவே முதல் முறை.

- அப்போது உத்பாவின் முகம் மாறி, அவரது இதயம் படபடக்கத் தொடங்குகிறது.

- நபி (ஸல்) அவர்கள் 13வது வசனத்தை ஓதியபோது: ‘‘ஆகவே, அவர்கள் புறக்கணித்து விடுவார்களாயின், ‘‘ஆது, ஸமூது கூட்டத்தாருக்கு உண்டான பேரிடி முழக்கத்தைப் போன்ற பேரிடி முழக்கத்தை, நான் உங்களுக்கு அச்சுறுத்துகின்றேன்’’ என்று (நபியே!) நீர் கூறுவீராக!’’ – ஸூரா ஹாமீம் ஸஜ்தா (41:13).



- இதைக்கேட்ட உத்பா துள்ளிக் குதித்து, நபி (ஸல்) அவர்களின் வாயில் கைகளை வைத்து இவ்வாறு கூறுகிறார்: ‘‘அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்கள் இரத்த உறவினர் என்ற உரிமையில் உங்களிடம் மன்றாடுகிறேன், இதை நிறுத்துங்கள்! மேலும் எந்த தண்டனையையும் அனுப்ப வேண்டாம்.’’

- உத்பா தன்னை அனுப்பிய மக்களிடம் திரும்பச் சென்று, ‘‘நான் சொல்வதைக் கேளுங்கள்! இவரை விட்டுவிடுங்கள். இதுவரை கேட்டிராத ஒரு உரையை இவரிடமிருந்து நான் கேட்டேன். இந்த மனிதர் சக்திவாய்ந்த ஒரு முக்கியமானவர்!’’, எனக் கூறினார்.

- பின்னர் உத்பா அங்கு கூடியிருந்த குரைஷிகளிடம் ஒரு நுணுக்கமான கூற்றை வைக்கிறார்: ‘‘மற்ற அரேபிய குலத்தவர்கள், நமக்காக அவரை உதறித்தள்ளிவிட்டால், அது நமக்கு வெற்றியாகும். ஆனால், அவர் அரேபியர்களை வென்றுவிட்டாலும், அவரது வெற்றி நமது வெற்றியாகும். அவரது அதிகார சக்தி, நமது சக்தியாகும்.’’

- இதைக்கேட்ட அம்மக்கள் உத்பாவை கேலி செய்து, ‘‘எல்லோரையும் சூனியம் செய்தது போல், உங்களையும் அவர் சூனியம் செய்துவிட்டார்’’ என்று கூறி, அவரது கூற்றை புறந்தள்ளி விட்டார்கள். (இப்னு ஹாஷிம், அல்சிரா அல்நபவிய்யா).

## பகுதி 6: குரைஷிகள் தெரிவித்த சமரச உடன்பாடு மற்றும் அதற்கு வஹீ மூலம் வந்த தீர்க்கமான பதில்கள்

- இந்த நேரத்தில், இஸ்லாம் மார்க்கம் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. குரைஷிகள் என்ன செய்வது எனத் தெரியாமல் திணறினர்.

- அவர்களின் பேச்சுவார்த்தைகளும், தந்திரங்களும் எந்த பலனையும் அளிக்கவில்லை.

- எனவே, குரைஷிகள் சமரசம் செய்து கொள்ள நினைத்து, நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள்.

- அவர்கள் முன்வைத்த சமரசம் என்னவென்றால், அவர்கள் ஒரு நாள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குவோம் என்றும், மறுநாள் தங்கள் சிலைகளை வணங்குவோம் என்றும் பரிந்துரை செய்தனர்.

- அப்போது அல்லாஹ், 109 வது ஸூரா அல்காஃபிரூனின் 1 முதல் 6 வசனங்களை அறிவித்தான்.

- ‘‘(நபியே!) நீர் சொல்வீராக! ‘‘ஓரிறை நிராகரிப்பாளர்களே! நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன். இன்னும், நான் வணங்குகிற (ஒரு)வனை நீங்கள் வணங்குகிறவர்கள் அல்லர்.

- அன்றியும், நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனல்லன். மேலும், நான் வணங்குகிற ஒருவனை நீங்களும் வணங்குபவர்கள் அல்லர்.

- உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்’’.

- இந்த வசனங்கள் மூலம் குரைஷிகளுக்கு உறுதியான மற்றும் தீர்க்கமான பதில் கிடைத்தது. நபி (ஸல்) அவர்களை கேலி செய்யவும், இழிவுபடுத்தவும் நினைத்த அவர்களின் எண்ணம் வீணானது. வணக்கத்தில் அவர்கள் வைத்த நிபந்தனைகளும் பயனில்லாமல் போனது.